செய்தி வெளியீடு எண் : 09 நாள் :04.05.2018

***தேனி மாவட்டம்,***
***1427-ம் பசலி ஆண்டு வருவாய் கிராமங்களுக்கான***
***வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) நடைபெறவுள்ளது***
***மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்:-***

*****

தேனி மாவட்டத்தில் 1427-ம் பசலி ஆண்டு வருவாய் கிராமங்களுக்கான வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) ஆண்டிபட்டி வட்டத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களாலும், போடிநாயக்கனூர் வட்டத்திற்கு மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களாலும், தேனி வட்டத்திற்கு மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) அவர்களாலும், உத்தமபாளையம் வட்டத்திற்கு உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் அவர்களாலும், பெரியகுளம் வட்டத்திற்கு பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் அவர்களாலும் 15.05.2018 முதல் 23.05.2018 வரை சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகத்தில் நடத்தப்படவுள்ளது.

அதனடிப்படையில், ஆண்டிபட்டி வட்டத்தில் முதலாம் நாள் 15.05.2018 அன்று ஆண்டிபட்டி உள்வட்டத்திற்குட்பட்ட கோவில்பட்டி, சண்முகசுந்தரபுரம், ஆண்டிபட்டி பிட்-1, ஆண்டிபட்டி பிட்-2 ஆகிய கிராமங்களுக்கும், இரண்டாம் நாள் 16.05.2018 அன்று ஆண்டிபட்டி உள்வட்டத்திற்குட்பட்ட புலிமான் கோம்பை, திம்மரசநாயக்கனூர் பிட்-1, திம்மரசநாயக்கனூர் பிட்-2 ஆகிய கிராமங்களுக்கும், மூன்றாம் நாள் 17.05.2018 அன்று கண்டமனூர் உள் வட்டத்திற்குட்பட்ட மொட்டனூத்து, ஜி.உசிலம்பட்டி, தேக்கம்பட்டி, மரிக்குண்டு, குன்னூர், வள்ளல்நதி ஆகிய கிராமங்களுக்கும், நான்காம் நாள் 18.05.2018 அன்று இராஜதானி உள்வட்டத்திற்குட்பட்ட கோத்தலூத்து, கொத்துப்பட்டி, இராஜதானி, பழையகோட்டை, ராமகிருஷ்ணாபுரம், பாலக்கோம்பை, தெப்பம்பட்டி, சித்தார்பட்டி, கணவாய்பட்டி ஆகிய கிராமங்களுக்கும், ஐந்தாம் நாள் 22.05.2018 அன்று மயிலாடும்பாறை உள்வட்டத்திற்குட்பட்ட கடமலைக்குண்டு, மயிலாடும்பாறை, மேகமலை ஆகிய கிராமங்களுக்கும் நடைபெறவுள்ளது.

போடிநாயக்கனூர் வட்டத்தில் முதலாம் நாள் 15.05.2018 அன்று இராசிங்காபுரம் உள்வட்டத்திற்குட்பட்ட இராசிங்காபுரம், சிலமலை, போ.அம்மாபட்டி ஆகிய கிராமங்களுக்கும், இரண்டாம் நாள் 16.05.2018 அன்று இராட்சிங்காபுரம் உள்வட்டத்திற்குட்பட்ட போ.மீனாட்சிபுரம் மற்றும் கோடாங்கிபட்டி உள்வட்டத்திற்குட்பட்ட பூதிப்புரம், கோடாங்கிபட்டி, உப்புக்கோட்டை ஆகிய கிராமங்களுக்கும், மூன்றாம் நாள் 17.05.2018 அன்று கோடாங்கிபட்டி உள்வட்டத்திற்குட்பட்ட டொம்புச்சேரி, கூழையனூர் மற்றும் போடிநாயக்கனூர் உள்வட்டத்திற்குட்பட்ட போடிநாயக்கனூர், மேலச்சொக்கநாதபுரம், போடி மேற்குமலை ஆகிய கிராமங்களுக்கும், நான்காம் நாள் 18.05.2018 அன்று போடிநாயக்கனூர் உள்வட்டத்திற்குட்பட்ட கொட்டக்குடி, போடி வடக்கு மலை, அகமலை ஆகிய கிராமங்களுக்கும் நடைபெறவுள்ளது.

தேனி வட்டத்தில் முதலாம் நாள் 15.05.2018 அன்று தேனி உள்வட்டத்திற்குட்பட்ட ஊஞ்சாம்பட்டி, அல்லிநகரம், வீரபாண்டி, உப்பார்பட்டி ஆகிய கிராமங்களுக்கும், இரண்டாம் நாள் 16.05.2018 அன்று தேனி உள்வட்டத்திற்குட்பட்ட கோட்டூர், சீலையம்பட்டி மற்றும் கொடுவிலார்பட்டி உள்வட்டத்திற்குட்பட்ட கொடுவிலார்பட்டி, ஜங்கால்பட்டி ஆகிய கிராமங்களுக்கும், மூன்றாம் நாள் 17.05.2018 அன்று கொடுவிலார்பட்டி உள் வட்டத்திற்குட்பட்ட பூமலைக்குண்டு, தப்புக்குண்டு, தாடிச்சேரி, கோவிந்தநகரம் ஆகிய கிராமங்களுக்கும் நடைபெறவுள்ளது.

உத்தமபாளையம் வட்டத்தில் முதலாம் நாள் 15.05.2018 அன்று சின்னமனூர் உள்வட்டத்திற்குட்பட்ட பூலாநந்தபுரம், சின்னமனூர், கருங்கட்டான்குளம், முத்துலாபுரம், சின்னஓவுலாபுரம் ஆகிய கிராமங்களுக்கும், 16.05.2018 அன்று தேவாரம் உள்வட்டத்திற்குட்பட்ட தேவாரம், தேவாரம் மலை, தே.மீனாட்சிபுரம், பண்ணைப்புரம் மற்றும் மார்க்கையன்கோட்டை உள்வட்டத்திற்குட்பட்ட பொட்டிபுரம், சங்கராபுரம் ஆகிய கிராமங்களுக்கும், மூன்றாம் நாள் 17.05.2018 அன்று கம்பம் உள்வட்டத்திற்குட்பட்ட க.புதுப்பட்டி, உத்தமபுரம், கம்பம், மேலக்கூடலூர் (தெற்கு), மேலக்கூடலூர் (வடக்கு), கீழக்கூடலூர் (மேற்கு), கீழக்கூடலூர் (கிழக்கு) ஆகிய கிராமங்களுக்கும், நான்காம் நாள் 18.05.2018 அன்று கம்பம் உள்வட்டத்திற்குட்பட்ட அனுமந்தன்பட்டி, நாராயணத்தேவன்பட்டி (தெற்கு), நாராயணத்தேவன்பட்டி (வடக்கு), காமயகவுண்டன்பட்டி மற்றும் மார்க்கையன்கோட்டை உள்வட்டத்திற்குட்பட்ட குச்சனூர், புலிக்குத்தி, மார்க்கையன் கோட்டை ஆகிய கிராமங்களுக்கும், ஐந்தாம் நாள் 22.05.2018 அன்று எரசக்கநாயக்கனூர் உள்வட்டத்திற்குட்பட்ட வேப்பம்பட்டி, சீப்பாலக்கோட்டை, ஓடைப்பட்டி, அழகாபுரி, எரசக்கநாயக்கனூர், கன்னிசேர்வைப்பட்டி, ஏரசக்கநாயக்கனூர் மலை ஆகிய கிராமங்களுக்கும், ஆறாம் நாள் 23.05.2018 அன்று உத்தமபாளையம் உள்வட்டத்திற்குட்பட்ட கோம்பை (கிழக்கு), கோம்பை (மேற்கு), மல்லிங்காபுரம், உத்தமபாளையம் (தெற்கு), உத்தமபாளையம் (வடக்கு) கோகிலாபுரம், இராயப்பன்பட்டி ஆகிய கிராமங்களுக்கும் நடைபெறவுள்ளது.

பெரியகுளம் வட்டத்தில் முதலாம் நாள் 15.05.2018 அன்று தேவதானப்பட்டி உள்வட்டத்திற்குட்பட்ட கெங்குவார்பட்டி பிட்-1, கொங்குவார்பட்டி பிட்-2, தேவதானப்பட்டி பிட்-1, தேவதானப்பட்டி பிட்-2, தே.வாடிப்பட்டி, சில்வார்பட்டி ஆகிய கிராமங்களுக்கும், இரண்டாம் நாள் 16.05.2018 அன்று தேவதானப்பட்டி உள்வட்டத்திற்குட்பட்ட ஜெயமங்கலம் பிட்-1, ஜெயமங்கலம் பிட்-2, குள்ளப்புரம், மேல்மங்கலம் பிட்-1, மேல்மங்கலம் பிட்-2 ஆகிய கிராமங்களுக்கும், மூன்றாம் நாள் 17.05.2018 அன்று தென்கரை உள்வட்டத்திற்குட்பட்ட கீழவடகரை, வடகரை பிட்-1, வடகரை பிட்-2, தென்கரை பிட்-1, தென்கரை பிட்-2 ஆகிய கிராமங்களுக்கும், நான்காம் நாள் 18.05.2018 அன்று தென்கரை உள்வட்டத்திற்குட்பட்ட எ.காமாட்சிபுரம், எண்டப்புளி, எ.புதுக்கோட்டை, தாமரைக்குளம் பிட்-1, தாமரைக்குளம் பிட்-2, வடவீரநாயக்கன்பட்டி ஆகிய கிராமங்களுக்கும் நடைபெறவுள்ளது.

எனவே, வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) நடைபெறும் நாட்களில் பொதுமக்கள் வருவாய்த் துறை மற்றும் பிற துறைகள் தொடர்பான அனைத்து குறைகளையும், மனுக்கள் மூலம் நிவர்த்தி செய்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**